2020 ஜனவரி 7] [பேரவைத் தலைவர்]

திரு. வ.மு. சுப்பிரமணியன் அவர்கள் 1977–1980 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் மானாமதுரை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் அச்சரப்பாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

டாக்டர் மு. தேவராஜன் அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் பெரம்பலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. எம். சக்திவேல் முருகன் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் அம்பாசமுத்திரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10–05

2. இரங்கல் தீர்மானம்

டாக்டர் பி.எச். பாண்டியன், சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *“1977–1980, 1980–1984, 1985–1988 மற்றும் 1989–1991 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து நான்கு முறை சேரன்மகாதேவி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப்*

[பேரவைத் தலைவர்] [2020 ஜனவரி 7

பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், 1980 முதல் 1984 வரை சட்டமன்றப் பேரவை துணைத் தலைவராகவும், 1985 முதல் 1988 வரை சட்டமன்றப் பேரவைத் தலைவராகவும், 1999 முதல் 2004 வரை திருநெல்வேலி மக்களவைத் தொகுதி உறுப்பினராகவும், கழக நாடாளுமன்ற குழுத் தலைவராகவும் பணியாற்றிய டாக்டர் பி.எச். பாண்டியன் அவர்கள் 4–1–2020 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

டாக்டர் பி.எச். பாண்டியன் அவர்கள், இனிய பண்பும், எளிமையும், அடக்கமும் தன்னகத்தே கொண்டு வாழ்ந்தவர். தொடக்க காலத்திலிருந்து கொள்கை உறுதிமிக்க தொண்டராகப் பணியாற்றி, கட்சித் தலைவர்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர். அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் பண்பால் அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றவர். திறமையாக வாதாடக்கூடிய சிறந்த மூத்த வழக்குரைஞராகவும், தனது ஆழ்ந்த அனுபவத்தாலும், செயலாற்றலாலும் ஜனநாயக, சட்டமன்ற மரபுகளை பாரபட்சமின்றி நேர்மையுடன் கடைப்பிடித்து பேரவையின் மாண்பையும், பாரம்பரியத்தையும் பேணிக்காத்து, கனிவோடும், கண்டிப்போடும் பேரவையை நடத்திச் சென்றதோடு, பேரவைத் தலைவராகப் பணியாற்றி தனக்கென்று தனி முத்திரை பதித்த பெருமைக்குரியவரும் ஆவார்.

இப்பெருந்தகையின் மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்ினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும் மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும்வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை தெரிவிக்கும்வகையில், பேரவையின் நிகழ்ச்சிகள் 15 நிமிடங்கள் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் 10–25 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10–08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் முற்பகல் 10–25 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

3. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

தார்ச் சாலை அமைத்தல்

***35434—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *மேட்டுப்பாளையம் தொகுதி, நெல்லித்துறை ஊராட்சி, விளாமரத்தூர் முதல் பில்லூர் அணை வரையிலான வனச் சாலையை தார்ச்சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, நெல்லித்துறை *ஊராட்சி, விளாமரத்தூர் முதல் பில்லூர் அணை வரையிலான வனச் சாலையானது, கோயம்புத்தூர் வனக் கோட்டம், மேட்டுப்பாளையம் வனத் துறைக்குட்பட்ட சுண்டப்பட்டி காப்புக் காட்டில் அமைந்துள்ளது.* இச்சாலையைத் தார்ச் *சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு* இருக்கிறதா *என்று மேட்டுப்பாளையம் தொகுதி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.*